# சுங்கை பூலோ-காஜாங் எம்ஆர்டி சேவை டிசம்பர் 16இல் ஆரம்பிக்கப்படும்




**சுங்கை பூலோ, டிச. 2-**

சுங்கை பூலோ- காஜாங் எம்ஆர்டி முதல் சேவை வரும் டிசம்பர் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்.

சுங்கை பூலோவில் இருந்து சமந்தான் வரையிலுள்ள 12 எம்ஆர்டி நிலையங்களுக்குச் செல்லும் 26 வழிகளில் சுமார் 112 பேருந்து வசதி செய்து தரப்படும். இந்த பேருந்து வசதி எம்ஆர்டி நிலையங்களிலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்திலுள்ள வீடமைப்பு பகுதிகளுக்கு, பேருந்து வசதி வழங்கப்படும் என தரை பொது போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைமை நிர்வாக அதிகாரி முகமட் அஜாருடின் மாட் ஷா தெரிவித்தார்.

இந்த பேருந்து வசதியினால் வீடமைப்புப் பகுதியில் இருக்கும் பெரும்பாலானோர் தங்களின் கார்களை விட்டு பேருந்து வசதியை பயன்படுத்த தொடங்குவர் என எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

எம்ஆர்டி சேவை செமாராக் வரையில் மட்டும் இருந்தாலும் கேஎல் சென்ட்ரல் வரை 10-15 நிமிடங்களுக்கு பேருந்து வசதி வழங்கப்படும் என்றும் அனைத்து இடங்களுக்கும் 1 வெள்ளி மட்டுமே வசூலிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தரை பொது போக்குவரத்து ஆணைக்குழு எம்ஆர்டி சேவையின் சாதகமான முன்னேற்றத்தையும் கிள்ளான் மற்றும் கோலாலம்பூரில் வசிக்கும் பொது மக்கள் சிறந்த ரயில் சேவையை அனுபவிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

எம்ஆர்டி கிள்ளான் பள்ளத்தாக்கு வழியே சுங்கை பூலோ-காஜாங் இன் இரண்டாவது பாதை வழி அடுத்த ஆண்டு ஜூலை 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.